OS 347/2021
வா.சா.1 போஸ் த/பெ பச்சையப்பன்
நாள் 21.08.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. என்னுடன் பிறந்தவர்கள் 3 பேர் என்னுடன் சேர்த்து 4 பேர். ராமு எப்போது இறந்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நானும் ராமுவும் கோபாலும் சேர்ந்து பாகப்பிரிவினை கூர்சீட்டு 27.09.1993ல் எழுதி கொண்டோம் என்றால் இல்லை. கோபால் முதலியார், வடிவேல் முதலியார் மற்றும் நானும் சேர்ந்து ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1999/2005ல் 29.04.2005ல் பதிவு செய்திருக்கிறோம் என்றால் இல்லை. மேற்படி உண்மைகளை மறைத்துவிட்டு பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளை தவிர எனது அப்பா பெயரில் வேறு ஒரு தனிப்பட்ட சொத்து இருக்கிறதா என்றால் அரசுக்கு 03.05.2005ல் சர்வே எண். 132/1சி, 1 ஏக்கர் 6 சென்டை தமிழக அரசு ஆதிதிராவிடர் நலத்துறைக்கு ரூ.75,000/-க்கு விற்றுவிட்டேன். ராமு யார் என்றால் எனக்கு தெரியாது. ராமு என் உடன் பிறந்த அண்ணன் என்றால் எனக்கு தெரியாது.

2. எங்களுக்குள் ஏற்பட்ட மேலே சொல்லப்பட்டுள்ள கூர் சீட்டு அடிப்படையில் ராமுவிற்கு கிடைத்த பாகத்தை அவர் உயிருடன் இருக்கும்போது விற்பனை செய்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது வழக்குரையில் 6வது பத்தியில் ஏற்கனவே பாகம் நடந்ததாக நான் விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் சொல்லியிருக்கிறேன்.